தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




MONTHLY

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜூனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 63
தலைப்பு : வசனிப்பு - Speech
வேத வாசிப்பு : யோபு 32:2



1. யோபு வசனித்து சொன்னது - யோபு 32:2
2. தாவீது கபட்டு வசனிப்புக்கு - சங்கீதம் 34:13
3. பவுல் சிறந்த வசனிப்போடாவது - 1கொரிந்தியர் 2:1


**G-Pay & PhonePe - 9443558041**

மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu



'ஒரே வழி' தபால் வழி வேதபாடம்
The Master Course படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.



**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**



**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 25 மார்ச் -2025 கனி - 4


ஆசிரியருரை

## துணிவு - Boldness



**ந**ல்விஷயத்தில் துணிவு மிகவும் அவசியம். துணிந்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் வெற்றியை அடைந்திருக்கிறார்கள். கர்த்தருக்குள் துணிந்து செயல்பட்ட ஒரு சிலரைக்குறித்து தியானிக்கவுள்ளோம். முதலாவது எஸ்தர் என்ற பெண்மணியைக்குறித்து தியானிக்கலாம். இவள் இந்து தேசம்முதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள 127 நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேருவின் நாட்களில் வாழ்ந்தவள். மொர்தெகாய், ஆத்தாகு என்ற பிரதானியிடம்; “யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலையும் அவனிடத்தில் கொடுத்து, அதை எஸ்தருக்குக் காண்பித்துத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச் சொன்னான்” (எஸ்த.4:8).

இதை அறிந்த எஸ்தர் தன் குலத்தாருக்கு விரோதமாக பிறப்பிக்கப்பட்ட கட்டளையை நினைத்து கலங்கினவளாக, மொர்தெகாய்க்கு பிரதியுத்தரமாக; “யாராவது அழைப்பிக்கப்படாமல், உள்முற்றத்தில் ராஜாவினிடத்தில் பிரவேசித்தால், புருஷரானாலும் ஸ்திரீயானாலும் சரி, அவர்கள் பிழைக்கும்படிக்கு அவர்களுக்கு ராஜா பொற்செங்கோலை நீட்டினாலொழிய மற்றபடி சாகவேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு, இது ராஜாவினுடைய சகல ஊழியக்காரருக்கும், ராஜாவினுடைய நாடுகளிலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரியும்; நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைப்பிக்கப்படவில்லை என்று சொல்லச் சொன்னாள்” (எஸ்த.4:11).

அந்நாட்களில் அழைப்பிக்கப்படாமல் ராஜாவினிடத்தில் செல்வது என்பது மிகவும் கடுமையான சட்டமாக இருந்தது. ராஜா பொற்செங்கோலை நீட்டாவிடில் அவர்களுக்கு மரணம் நிச்சயம். இப்படிப்பட்ட தவறாத சட்டம் இருந்தது. ஆனால் யூதர்களை அழிக்கும்படியாக ஆமான் மூலமாக வெளியான சட்டத்தை தடுத்த நிறுத்த எஸ்தர் ராஜாவை பார்க்கவேண்டிய நிலையில் இருந்தாள். ஆகவே ஒரு தீர்மானம் எடுத்து மொர்தெகாய்க்கு பிரதியுத்தரமாக: “நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்”

(எஸ்த.4:16). எஸ்தர் துணிந்து நான் செத்தாலும் சாகிறேன் என்று சொன்னாள். அவளுடைய துணிவு எப்படிப்பட்டதென்று பார்த்தீர்களா? துணிந்தவர்களுக்கு முன்னிருக்கிற எந்தக் காரியமும் தூசிபோன்றது. ராஜாவுடைய கண்களில் இவளுக்கு தயவு கிடைத்தது. இதினாலே தன் குலமக்களுக்கு வரவிருந்த ஆபத்திலிருந்து 127 நாடுகளிலும் இருந்த யூதர்களை காப்பாற்றினாள்.

ஒருவளுடைய துணிச்சலினால் அநேகர் காப்பாற்றப்பட்டார்கள். ஒருவேளை இவள் தன் உயிரை பெரிதாக கருதியிருப்பாளேயானால் என்ன நடந்திருக்கும்? இவள் சுகபோகமாக வாழ்ந்திருப்பாள். ஆனால் யூதருக்கு இரட்சிப்பு வேறுவழியில் வந்திருக்கும். இவள் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தபடியினால் யூதர்களுக்கு இருந்த சஞ்சலம் சந்தோஷமாகவும், அவர்கள் துக்கம் மகிழ்ச்சியாகவும் மாறினது. இதினாலே பூரீம் பண்டிகை வந்தது.

**இரண்டாவது யோசேப்பின் துணிவு:** இந்த யோசேப்பு இயேசுவின் அந்தரங்க சீஷன். வெளிப்பிரகாரமாக வாழ்ந்த பதினொரு சீஷர்களும் இயேசுவைப் பிடித்தவுடன் நான்கு திசைகளிலும் சிதறிப்போனார்கள். "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி" எல்லோரும் சிதறிப்போனார்கள். இதினாலே ஆண்டவர் இயேசு சோர்ந்துபோகவில்லை; "தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது என்றார். அப்பொழுது சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்" (மத்.26:56).

தலைவனுக்கு ஒரு பிரச்சனை என்றால்; அவனுடைய தொண்டர்கள் இந்நாட்களில் பல இடங்களில் தீயிடுதலும், பஸ்மறியலும், அரசுக்கு பல சேதங்களையும் ஏற்படுத்துகிறார்கள். ஆனால் இயேசுவைப் பிடித்தவுடன் மூன்றரை ஆண்டுகளாக அவரோடு உண்டு, உறங்கி, பலவிதமான அற்புதங்களை தங்கள் கண்களாலே கண்ட அப்போஸ்தலர்கள் தங்களையும் பிடித்து கொலைசெய்து போடும்படியாக கொண்டுபோவார்கள் என்று அறிந்து தங்களுடைய ஜீவன் தப்ப ஓடிப்போனார்கள். அவர்கள் மெதுவாக கடந்து சென்றார்கள் என்று வசனம் சொல்லவில்லை; மாறாக ஓடிப்போனார்கள். அப்படியென்றால் அவர்களுக்கு எவ்வளவு பயம் இருந்திருக்கிறது என்பதை நாம் அறியமுடிகிறது. அன்பு நண்பரே, கிறிஸ்துவில் விசுவாசமாயிருக்கும் விசுவாசியே உன் விசுவாசம் ஆண்டவர் மீது எப்படிப்பட்டதாக இருக்கிறது? உனக்காக மரித்த ஆண்டவர் இயேசுவை நீ எந்த அளவு நேசிக்கிறாய்? உன்னுடைய அன்பு எப்படிப்பட்டதாக இருக்கிறது?

அந்தரங்க சீஷனாகிய யோசேப்பை பற்றி வேதம் இவ்விதமாக சொல்லுகிறது; "கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு என்பவன் வந்து, பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்" (மாற்.15:43). அந்தரங்க சீஷனுக்கு வந்தது துணிவு. இது எப்படி வந்தது? இயேசுவின் மீது கொண்ட அன்பு, அவரில் கொண்ட விசுவாசம். அவன் ஒரு உண்மையுள்ள சீஷன் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. அந்நாட்களில் இயேசுவின் சரீரத்தை துணிந்து கேட்க பயப்பட்டார்கள். ஆனால் யோசேப்பு

பிலாத்துவினிடத்தில் துணிந்து இயேசுவின் சரீரத்தை கேட்டு அதை வாங்கி தான் வெட்டிவைத்திருந்த புதிய கல்லறையில் அவரை வைத்தான். யாரும் வைக்கப்படாத கல்லறை அது. அப்படியே இன்று வரை அதில் யாரையும் வைக்கவில்லை.

அநேக கல்லறைகளைப் பார்க்கிறோம். அதில் அநேகரை வைத்திருப்பார்கள். அவரவர் அவரவருடைய உறவினர்களை அதில் அடக்கம்செய்வார்கள். ஆனால் இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட கல்லறை ஒருவரும் வைக்கப்படாத கல்லறை. இயேசுவுக்காக கொடுத்தவர்கள் அனைரும் விலைமதிப்புள்ளவற்றையே கொடுத்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். இயேசுவின் பிறப்பின்போது, தங்கம், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் இவைகளை சாஸ்திரிகள் காணிக்கையாக கொண்டுவந்தனர். இயேசுவுக்கு பரிமளதைளம் பூசியவள் விலையேறப்பெற்ற தைலத்தைப் பூசினாள் என்றெல்லாம் பார்க்கிறோம். அன்பானவர்களே, உங்களுடைய காணிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது. உன்னதமானவருக்கு உங்களுடைய செலவுகள் போக மீதமானதை காணிக்கையாக கொடுக்கிறீர்களா? அல்லது முதல் தரமானவற்றையும், உங்களுக்கு உள்ளவைகளில் முதலிடத்தை கர்த்தருக்கு காணிகையாக கொடுக்கிறீர்களா? யோசேப்பு தனக்காக வெட்டி வைத்திருந்த கல்லறையையே கொடுத்தான். இயேசுவுக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொடுக்க பயந்த நாட்களில் அவன் தன் கல்லறையையே கொடுத்து துணிந்து இயேசுவின் சரீரம் பாதுகாக்கப்பட தேவனில் அன்பு செலுத்தினான். நீங்களும் இவ்விதமாக உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**மூன்றாவது பர்னபா,** பவுல் போன்றவர்கள் முதல் நூற்றாண்டில் துணிந்து செயல்பட்டனர். ஆகையால் “பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள்” (அப்.14:12). அந்த அளவு ஜனங்கள் மத்தியில் பிரகாசமாக காணப்பட்டார்கள். தேவர்கள் மனுஷர்களின் ரூபமெடுத்து நம்மிடத்தில் வந்திருக்கிறார்கள் என்று சொல்லும் அளவுக்கு அவர்களுடைய முகம் பிரகாசமாக இருந்தது. அவர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருந்ததினால் அவர்கள் முகம் அந்தவிதமாக இருந்தது. இன்றைக்கு நம்முடைய முகங்கள் சிலவேளைகளில் மாறிவிடுகிறது என்ன காரணம்? நாம் கர்த்தருக்கு ஏற்ற காரியங்களை சிந்திக்காமல் உலகபிரகாரமாக சிந்திக்கும்போதும், பிசாசுக்கு இடம்கொடுக்கும்போதும் நம்முடைய முகங்கள் மாறிவிடுகின்றன.

மோசே மலையிலிருந்து வரும்போது அவனுடைய முகத்தை ஜனங்கள் பார்க்கமுடியாத அளவு பிரகாசமாக இருந்தது. எப்படி? அவன் தேவனோடு பேசிவிட்டு வந்தான். ஆகையால் அவனுடைய முகம் பிரகாசமாயிருந்தது. நீங்கள் தேவனோடு ஜெபத்தின் மூலமாக தரித்திருப்பீர்களென்றால் நீங்களும் அவ்விதமாக இருப்பீர்கள். வசனங்களுக்கு செவிகொடுத்து வசனத்தின்படி வாழும்படியாக உங்களை ஒப்புக்கொடுப்பீர்களானால் உங்கள் மூலம் கிறிஸ்து வெளிப்படுவார். நீங்களும் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்துகொள்வீர்கள்.

பவுல் பர்னபா போன்றோர் வெறும் வார்த்தையோடு நின்று விடவில்லை. செயலிலும் காண்பித்தார்கள். “கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்” என்று பிலிப்.1:21-ல் சொல்லியபடி அவர்கள் எருதுகளையும் பூமாலைகளையும் அவர்களுக்கு செலுத்தும்படியாக வரும்போது ஏன் இப்படிச்செய்கிறீர்கள் என்று

சொல்லி தங்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு கூட்டத்திற்குள் ஓடி நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்கள் தான் என்று அறிக்கையிட்டார்கள். சில மனிதர்கள் தங்களை உயர்வாக ஜனங்கள் நினைத்துவிட்டால் போதும் அதை அப்படியே ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் இங்கு பர்னபாவும் பவுலும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களை அவர்கள் பூஜிப்பதை விரும்பவில்லை. வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவரை அறிவிக்கிற ஊழியக்காரர்களாக தங்களைக் காண்பிக்கவே விரும்பினர்.

ஆகையால் இவர்களை அனுப்பின எருசலேம் சபையார் சொல்லும்போது; "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட, எங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சில மனுஷரை உங்களிடத்திற்கு அனுப்புகிறது ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது" என்று சொல்வதை நாம் அப்போஸ்தலர் 15:25,26 வசனங்களில் படிக்கிறோம். தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்க துணிந்தவர்கள்தான் பர்னபா, பவுல் போன்றவர்கள். ஆகையால் இந்த கனமான ஊழியத்தை கர்த்தருடைய சமுகத்தில் பெற்றுக்கொண்டார்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் துணிவுள்ளவர்களாக, இருந்துகொண்டு துணிந்து செயல்படுகின்றீர்களா? எஸ்தர் என்ற பெண்மணி துணிந்து செயல்பட்டாள். யோசேப்பு என்ற தேவமனிதன் துணிந்து பிலாத்துவினிடத்தில் சென்று இயேசுவின் சரீரத்தை பெற்று தன்னுடைய புதிய கல்லறையில் அவரை அடக்கம்செய்தான். பர்னபா மற்றும் பவுல் போன்றோர் இயேசுவின் நாமத்திற்காக துணிந்து பிரசங்கித்தவர்கள். முதல் நூற்றாண்டில் இப்படிப்பட்டவர்களாலே ஆசிய முழுமைக்கும் சுவிசேஷம் பரவ காரணமாயிருந்தது. உங்களுடைய துணிச்சல் எப்படிப்பட்டதாக இருக்கிறது. துணிந்து செயல்படுங்கள் இவர்களோடு இருந்து இவர்களை வழிநடத்திய கர்த்தர் உங்களோடும் இருந்து உங்களை வழிநடத்துவார்.

**நம்முடைய கிரியைகளை கர்த்தர் அறிவாரா?**

ஆம், அவர் சகலத்தையும் அறிவார். "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என்கிறார் (வெளி.3:8). நமக்கு இருக்கிற கொஞ்ச பெலத்தினாலே நாம் நிலைத்திருக்கிறோம் என்பதுவே உண்மை.

மேலும் முழுதைரியத்தையும், முழுபெலத்தையும் கர்த்தருடைய சமூகத்தில் பெற்றுக்கொள்ள தொடர்ந்து கர்த்தருடைய வசனத்தைக் கைக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆதி அப்போஸ்தலர்களை கர்த்தருடைய வசனம் வழிநடத்தினது. அது இன்றும் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களை வழிநடத்துகிறது. இதோ திறந்த வாசல் வைக்கப்பட்டிருக்கிறது. இதை தடைசெய்ய ஒருவனாலும் கூடாது ஆகையால் துணிந்து செயல்படுங்கள். கர்த்தர் உங்களைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்வார். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# சபையின் அமைப்பு
## Organization of the Church
*J.C.Choate*

சபையானது அழைக்கப்பட்டவர்களாலும், இரட்சிக்கப் பட்டவர்களாலும், உலக வழிகளை விட்டு விட தீர்மானித்திருக்கிறவர் களாலும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறந்திருக்கிறவர்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இது தன் நோக்கத்தில் சர்வதேச அளவிலும், உலக அளவிலும் அமைந்துள்ளது. கிறிஸ்து தம்முடைய சபையை தாம் கட்டப்போவதாகக் கூறினார் (மத்.16:18). மேலும் சபை உலகத்தில் எவ்விடத்திலும்,எங்கும் இருக்கிறது. சபையார் கூட்ட அமைப்பால் உள்ளூரிலும் சபை இருக்கிறது. வேதாகமம் கொரிந்து, தெசலோனிக்கேய, கொலோசெய போன்ற பல பட்டணங்களில் கூடிவந்த சபையைக் குறித்து பேசுகிறது (1கொரி.1:1,2; 1தெச.1:1,2; கொலோ.1). ஒருவர் உள்ளூர் சபை அங்கத்தினராக இருக்கலாம் ஆனால் அவர் உலகம் முழுவதும் எங்குசென்றாலும் அவர் உலகளாவிய சபையின் அங்கத்தினராகவுமிருக்கிறார்.

சபை தனிப்பட்ட மக்களால் உருவாக்கப்பட்டிருப்பதால் இது தேவன் ஏற்படுத்தின நோக்கத்திற்காக ஊழியஞ்செய்யக்கூடியதாயிருந்தால் இது பணிசெய்யும் ஒரு அமைப்பிற்குள்ளாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது அவசியமாகும். இதன் தலைவர் கிறிஸ்துவே, அவர் இந்த அதிகாரத்தை எந்த ஒரு மனிதனோடும் பங்கிட்டுக் கொள்ளுகிறதில்லை. பவுல் கிறிஸ்துவைக் குறித்து, "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்"(கொலோ1:18) எனக் கூறினார். பவுல் மேலும் எபேசு சபைக்கு, "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்"(எபே.1:22,23)எனக் கூறுகிறார்.

சபையானது பூமிக்குரிய தலைமை ஸ்தாபனங்களைப் பெற்றிருக்கவில்லை. கிறிஸ்து பரலோகத்திலே பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து அவரே சபையின் தலைவராக இருக்கிறார். சபை ஏதாவது "தலைமை ஸ்தாபனங்களை" பெற்றிருக்குமானால் பிறகு நாம் இது தமது தலைவர் இருக்கிறதான பரலோகத்தில் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்திருப்போம். "நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" (கொலோ.3:1) என வாசிக்கிறோம். எபிரெயர்1:3-ம் வசனம் இதையே போதிக்கிறது. ஆனால் உலக அளவில் சபையைக்குறித்த காரியம் என்ன? கிறிஸ்து தலையாயிருப்பதைத் தவிர உலகளாவிய அமைப்பினை சபை பெற்றிருக்க வில்லை. உள்ளூரில் சபை அங்கத்தினர்கள் சபைக்குள் குழுவாக இருக்கின்றனர், மேலும் ஒவ்வொரு சபையும் சுயமாக செயல்படுகின்றது,மேலும் இது சுயாட்சி செய்கிறது. கிறிஸ்து உள்ளூர் சபையின் தலைவராக இருக்கின்றார், அவரே தம்முடைய புதிய ஏற்பாட்டு வார்த்தையின் அதிகாரத்தின் மூலம் ஆட்சி செய்கின்றார், சபையின் மனிதர் வேதவாக்கியங்களினால் வழிநடத்தப்படுகிறவர்களாக கிறிஸ்துவின் அதிகாரத்தை பூர்த்திசெய்யும்படிக்கு தலைமை தாங்கி நடத்தும் பொறுப்புடையவர்களாக யிருக்கிறார்கள். அவர்கள் போதிக்கின்றவர்களாகவும், உபதேசிக்கின்றவர்களாகவும், தரும காரியங்களையும் சபையின் சுவிசேஷப் பணியையும் திட்டமிடுகிறவர் களாகவுமிருக்க வேண்டும். மேலும் ஸ்திரீகள் மற்ற ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் போதிக்க வேண்டியதும் அவசியம், ஸ்திரீகளால் பல்வேறு தரும காரியங்களையும் அந்நியரை உபசரிக்கும்பணிகளையும் மிகச்சிறப்பாக கையாள வேண்டியதும் அவசியம்.

மனிதரும் கூட சபைக்குரிய எந்த வேலையையும் செய்ய வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

சபை அங்கத்தினர்களாலும், ஆவியினாலும் வளர்கிறது போல, தகுதிவாய்ந்த முதிர்ச்சியடைந்த மனுஷர் மத்தியிலிருந்து மூப்பர்களும் உதவிக்காரர்களும், சபையின் 'மேய்ப்பர்கள்' மற்றும் 'ஊழியர்கள்' போல செயல்படுவதற்கு நியமிக்கப்படும் நிலையை சபை அடையவேண்டும். அங்கு இரண்டு அல்லது அதற்கு மேலான மூப்பர்களும், இரண்டு அல்லது அதற்கு மேலான உதவிக்காரர்களும் நியமிக்கப்பட்டு தங்களுடன் ஐக்கியமாகும் அங்கத்தினர்களால் அறிந்து கொள்ளப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். இந்த மனுஷர் வேதவாக்கியங்களில் கோடிட்டு காட்டப்பட்ட குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் (1தீமோ.3; தீத்து1).

மூப்பர்கள் (பாஸ்டர்கள், பிஷப்கள், பிரஷ்பிடர்கள் மற்றும் மேய்ப்பர்கள் என்றும் கூட அழைக்கப்படுகின்றனர்) மந்தையை வழி நடத்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் சபையின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் கவனம் செலுத்த வேண்டியவர்கள். உதவிக்காரர்களும் கூட பணிவிடைக்காரர்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள் மேலும் அவர்கள் மூப்பர்களுக்கு சபை பணிகளில் உதவிக்காரர்களாக இருக்கவேண்டும். அவர்கள் வழக்கமாக சபைப்பொருட்கள் அல்லது சபையின் சரீரதேவைகளை கவனிக்கும் பொறுப்பில் நியமிக்கப்படுகிறார்கள்.

சபையில் மிக உயர்ந்த பணி உள்ளூர் சபையில் மூப்பர்களில் ஒருவராக ஊழியஞ்செய்வதேயாகும். கர்த்தர் சபையின் தனிப்பட்ட ஒரு ஆண் அங்கத்தினர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சபைகளின் மேல் ஆளுகை செலுத்துபவராக ஊழியஞ்செய்ய சித்தங்கொள்ளவில்லை. ஆனபடியால், அவர் ஒரு சபையில் இருக்கும் மூப்பர்களில் ஒருவரை போலிருக்க ஒரு மூப்பரின் அதிகாரத்தை கட்டுப்படுத்தினார். மூப்பராக இருக்கிறவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களோடு இணைந்து சபைப்பணிகளில் ஈடுபட வேண்டும். மேலும் பவுல் பட்டியலிட்டிருக்கிற தகுதிகளை உடையவராக இருக்க வேண்டும். அத்தோடுகூட கர்த்தருடைய நோக்கங்களை நிறைவேற்றும்படிக்கு மூப்பர்கள் தங்களுக்குள்ளேயும் உள்ளூர் சபை அங்கத்தினர்களோடும் கூட இணைந்து ஊழியஞ்செய்ய கற்றுக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

ஆடுகளை மேய்ப்பது (அப். 20:28) அல்லது சபையின் ஆவிக்குரிய போஜனத்திற்கு கொடுத்துதவுவது மூப்பர்களுடைய வேலையாயிருக்கிறது. அவர்கள் கள்ள உபதேசத்திற்கு அவைகளை விலக்கிக் காத்து பக்தியற்றவர்களையும் அவிசுவாசமுள்ள சபை அங்கத்தினர்களையும் ஒழுங்குப்படுத்த ஆயத்தமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். உள்ளூர் சபை போதகர்களையும், பிரசங்கியார்களையும் கொண்டிருக்க வேண்டும், மேலும் எல்லா அங்கத்தினர்களும் உண்மையாகவே கர்த்தருடைய ஊழியக்காரர்களாயிருப்பது அவசியம். ஆராதிக்கும்படிக்கு ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் அவர்கள் ஒருவரையொருவர் சந்திப்பதினால் அங்கு ஒற்றுமையிருக்க வேண்டும். அவர்கள் இழந்த நிலையில் இருப்பவர்களுக்கு சுவிசேஷத்தை கொடுப்பதில் பிரசங்கியாகவுமிருக்க வேண்டும். சபையிலும் சமுதாயத்திலும் தேவையிலிருப் பவர்களுக்கு உதவி செய்வதில் இரக்கம் காட்டுபவர்களாக இருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களைக் கொண்ட ஒரு சபை வளர்ச்சியடைகிறதாகவும், ஆவிக்குரியதாகவும், பிரசங்கிக்கிறதாகவும், விசுவாசமிக்கதாகவுமிருக்கவேண்டும். அப்படியிருக்கும் போது சபை கிறிஸ்தவம் என்பது என்ன என்பதையும், சபை தம்முடைய அங்கத்தினர்களோடு ஒருவரில் ஒருவர் அன்பு கொண்டிருப்பதையும், ஆத்தும பாரம் கொண்டிருப்பதையும் இழந்துபோனதை இரட்சிக்கவும் ஒரு நல்மாதிரியைக் கொண்டிருப்பதையும் எல்லாவற்றிலும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்து கனப்படுத்து கிறதையும் மெய்ப்பிக்கிறதாயிருக்கிறது. இது ஒழுங்குப்படுத்தப்பட்ட கர்த்தருடைய சபையாகும்.

## வேத அறிவுப்போட்டி
## எண் 292 ன் விடைகள்

1. விடுவிக்கமாட்டாது - எசே.7:19
2. ஆம் - 2தெச.2:7
3. தானியேல் - தானி.7:14
4. இளவயதுள்ள விதவைகள் - 1தீமோ.5:13
5. ஆம் - ஓசி.12:11
6. தீமோத்தேயுவுக்கு - 2தீமோ.4:3
7. யோவேல் - யோவே.1:13
8. நித்திய ஜீவனைக்குறித்து - தீத்து 1:3
9. ஆமோஸ் - ஆமோஸ் 3:5
10. எபிரெயர் - எபி.13:18

## வேத அறிவுப்போட்டி
## எண் 293 ன் விடைகள்

1. ஒபதியா - ஒபதி.9
2. யாக்கோபு - யாக்.2:24
3. யோனா - யோனா 2:7
4. நீதிமான்கள்மேல் - 1பேது.3:12
5. மீகா - மீகா 7:18
6. பிலேயாம் - 2பேது.2:16
7. பச்சைகிளிகள் - நாகூம் 3:17
8. பாவஞ்செய்கிறதில்லை - 1யோவா.3:6
9. ஆபகூக் - ஆபகூ.1:12
10. தியத்தீரா - வெளி.2:28

## வேத அறிவுப்போட்டி
## எண் 292 ல் வெற்றிபெற்றவர்கள்

1. Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
2. P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
3. Mrs.பாலின்மார்ட்டின் - காரைக்குடி
4. K.ராணிமூர்த்தி - ஏர்வாடி
5. Mrs.ஜாய் மேத்யூ - வி.கே.புரம்
6. E.அதிசயம் - பனைகுடி
7. Mrs.ரூபவல்யா - நாசரேத்
8. S.சாந்தகுமாரி - நாசரேத்
9. Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
10. Mrs.லலிதாபெவின்சன் - சிவகங்கை
11. R.ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
12. S.செல்வராஜ் - திருநெல்வேலி
13. Mrs.ஜெநிதர்மராஜ் - திருநெல்வேலி
14. Mrs.பாலின்டேனியேல் - சென்னை
15. D.ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
16. N.வசந்தகுமாரி - வத்தலக்குண்டு
17. Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
18. S.அசோக்குமார்பிரின்ஸ் - கச்சனாவிளை
19. D.அன்புக்கமலம் - கோவை
20. Mrs. சுசிலாஜோசப் - நாமக்கல்
21. K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
22. Mrs.சந்திராஆல்பர்ட் - திருநெல்வேலி
23. Mrs.பியூலாஜேசுரத்தினம் - பாண்டிச்சேரி
24. Mrs.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
25. M.காபிரியேல் - பாண்டிச்சேரி
26. J.S.மேரித்தாய் - திண்டுக்கல்
27. Mrs.ஃபுளோராசீத்தர் - சென்னை
28. Mrs.ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
29. D.விஜயகாந்தா - கூத்தம்பாக்கம்
30. G.லீலாவதி - சென்னை

"என் வேதத்தின் மகத்துவங்களை
அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்"...
ஓசியா8:12

## வேத அறிவுப்போட்டி
## எண் 293 ல் வெற்றிபெற்றவர்கள்

1. Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
2. S.ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
3. Mrs.ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
4. Mrs.பாலின்மார்ட்டின் - காரைக்குடி
5. Mrs.ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி
6. Mrs.லலிதாபெவின்சன் - காரைக்குடி
7. Mrs.பியூலாஜேசுரத்தினம் - பாண்டிச்சேரி
8. K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
9. Mrs.ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
10. D.அன்புக்கமலம் - கோவை
11. P.சந்திரடேனியேல் - நஞ்சான்குளம்
12. Mrs.ரோஸ்லின்தாமஸ் - சென்னை
13. S.அசோக்குமார்பிரின்ஸ் - தூத்துக்குடி
14. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
15. V.C.ரூபவல்யா - நாசரேத்
16. Mrs.ஜெபக்கொடிஜெயசீலி - திருச்சி
17. S.சாந்தகுமாரி - நாசரேத்
18. Mrs.கிறிஸ்டோபல் - கோவை
19. Mrs.சந்திராஆல்பெர்ட் - திருநெல்வேலி
20. S.செல்வராஜ் - திருநெல்வேலி
21. D.ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
22. N.வசந்தகுமாரி - வத்தலக்குண்டு
23. A.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
24. D.விஜயகாந்தா - கூத்தம்பாக்கம்
25. Mrs.சுசீலாஜோசப் - திருச்சி
26. J.செல்வராஜ் - தூத்துக்குடி
27. Mrs.ஜெயாபாணிஜெபராஜ் - மேற்குதாம்பரம்
28. A.அன்னாள் ஜெபக்கனி - கோவை
29. Mrs.ஃபிளோராசீத்தர் - சென்னை
30. P.ஜான்சிசெல்லத்துரை - இருங்களூர்
31. J.ஜான்சி - ஆனைமலை
32. Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
33. E.அதிசயம் - பனைகுடி
34. Mrs.பாலின்டேனியேல் - சென்னை
35. T.கிறிஸ்டிகுமார் - கரூர்
36. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
37. M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
38. G.லீலாவதி - சென்னை
39. E.ஜாய்ஸ்ஹெலன்புனிதா - சென்னை
40. G.லலீதா எலிசபெத் - புதுச்சேரி
41. Mrs.தேவிராஜசிங் - திருப்பூர்

பெண்கள் பகுதி

## தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

**Can Man Find the Way to God?**

பாடம் -1

*-Betty*



**– சென்ற இதழின் தொடர்ச்சி**

**நுண்ணோக்கியின் உதவியினால் பார்க்கக்கூடிய கண்களை நாம் பெற்றிருந்தோமானால்... If we had microscopic eyes...**

உங்களுடைய கண்கள் சிறந்தவைகளாக, பூக்களின் செல்களை உள்நோக்குபவையாக அவைகளின் வேலைப்பாடுகளின் எண்ணற்ற முழுமையை உற்றுநோக்குவையாக, தோற்றத்தை மாற்றும் சூரிய ஒளியினையும் மண் மற்றும் நீரிலிருந்து சத்துக்களை எடுத்து பூக்களினூடே பயனுள்ள சாரத்தை செலுத்தி, முழுத் தாவரத்திற்குள்ளும் சத்துக்களை அனுப்பி, தொடர்ச்சியான வளர்ச்சிக்காக புதிய செல்களை உருவாக்குகிற கார்பன்டை ஆக்ஸைடை எடுத்துக் கொண்டு நாம் சுவாசிக்கும் ஆக்ஸிஜனை வெளியிடுவதைப் பார்க்கக் கூடிய கண்களையுடையவர்களாய் இருந்தால்! ஆ! இந்த மனிதக் கண்கள் சிறப்பானவற்றை மட்டுமே பார்க்கக்கூடும், நாம் ஆச்சரியமிக்க பூதக்கண்ணாடியினால் பார்க்கக்கூடிய கண்களால் செல்-உலகங்கள் உயிர் வாழ்வன அனைத்தையும் உருவாக்குகிறது என கண்டுகொள்ளமுடியும்!

ஆனால், அநேக உயிர்வாழ்வனவற்றை நாம் காணமுடியாது, நம்முடைய சரீர பிரகாரமான உலகத்தில் கூட பார்க்க முடியாது. இப்படிப்பட்ட நுண்ணிய உயிரினங்களை கொஞ்சங்குறைய நிஜத்தை உருவாக்கும் இந்தக்கண்களால் பார்க்கமுடியாது உண்மையாயிருக்கிறதா? இல்லை, நிச்சயமாக இல்லை!

இப்போது, மிகப்பெரிய அளவில் வடிவமைக்கப்பட்டு, நம் பாதையில் கிடந்த உடைந்துபோன தட்டு, அல்லது உயிருள்ள பூக்கள் அதன் உருவமைப்பில் காணப்படும் நுண்ணறிவு முழுவதுமே உண்மையானதாக இருக்கின்றதா? கொடுக்கப்பட்டுள்ள, ஒரு பூ உருவாக்கப்படுகின்றதை நாம் ஒருபோதும் கண்டிருக்கவில்லை (ஆனால் அந்த தட்டிற்கு ஒரு படைப்பாளி இருந்தார் என்பதை நாம் சந்தேகிப்பதில்லை, இருந்தபோதிலும் நாம் அந்தப் படைப்பாளியை ஒருபோதும் பார்க்கவில்லை) இந்தப் பூக்களின் படைப்பில் கரங்களும் மனதும் இணைந்து ஒரு உருவத்தை படைத்துள்ளது என்றாலும் இந்த சரீரப்பிரகாரமான மனிதக் கண்கள் சாதாரணமாக அதைப் பார்க்கவில்லை. ஆனால் அண்டசராசரங்களில் இருக்கின்ற ஒவ்வொன்றும் நுண்ணறிவும் வடிவமைப்பை கண்பிக்கிற போது, உண்மையாகவே இவைகளையெல்லாம் உருவாக்கிய பிரதானமான அதிகாரமிக்க நுண்ணறிவுள்ள வடிவமைப்பாளர் ஒருவர் ஆதியிலே இவற்றைத் துவங்குவதற்கு இது ஞானமான காரியமில்லையா? வியக்கத்தக்க வகையில் உருவாக்கப்பட்ட ஒரு வெளிப்படையானப் பொருளை நாம் காணும்போது

தொடர்ந்து தானாகவும் மற்றும் அறிவியல் பூர்வமாகவும் நிறைவேறுகிறது என்பது உண்மையில்லையா?

சரீரப்பிரகாரமான கண்களின் பார்க்கும் திறன் போதுமான அளவில் இல்லாமல் எல்லாவற்றிற்கும் மேலான மாபெரிய குருட்டுத்தன்மை இருப்பதினால் வெறுமனே தேவன் இருக்கிறார் என்பதை மறுதலிக்கச் செய்கிறது.

### தாக்குதலின் கீழ்...

## Under Attack...

சிருஷ்டிகர் ஒருவர் உண்டென விசுவாசிக்கிற நம்மில் பலரில் தந்திரமான மற்றும் தொடர்ச்சியான நேரடி தாக்குதலின் அவிசுவாச தாக்குதலை ஏற்படுத்துகிறது. அறிவியல் அறிஞர்கள், கல்வியாளர்கள், மேதைகள் எல்லாருடைய கூற்றுகளும் தவறானவையாக இருக்கமுடியுமா? அல்லது நான், நானாகவே குருட்டுத்தனமான நம்பிக்கைகளில் வாழ்கின்றேனா?

தேவன் உயிருடன் இருக்கிறார் என்ற விஷயத்தில் நேர்மையுடனிருக்கும் வண்ணமாக எனக்குள்ளேயே என்னால் பார்க்க முடியாது; என நான் பல கடினமான கேள்விகளை எனக்குத் தானே கேட்டிருக்கிறேன். அதற்கு விடையாக என் மனதில் நடுநிலையான முடிவில்லாத, தானாகவே தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிராத எண்ணத்தை வைக்க முயலுகிறேன்.

### முடிவுரை எண் ஒன்று: நான் உயிரோடிருக்கிறேன்!

## Conclusion Number One: I Exist!

இக்கூற்றில், சுயபோராட்டத்தின் மனசாட்சி எனது முதல் உணர்வாகயிருக்கிறது. "அக்கறையில்லாத தர்க்க சாஸ்திரம், வாக்குவாதங்கள் தங்களுக்கு அனைத்து பதில்களும் தெரியுமென நினைக்கிற மேதைகளின் விவாதங்கள், என்னுடைய சொந்த ஜீவியத்தின் உண்மைத்தன்மை இந்த மாறுபட்ட கருத்து உள்ளவரோடு பேசி சமாளிக்க வேண்டியிருக்கிறது என நான் நினைக்கிறேன். **நான் இருக்கிறேன். நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்.** இந்த உண்மையை வெற்றி கொள்ள வேறெதுவுமில்லை.

"எனவே நான் இங்கே எப்படி வெற்றிகொண்டேன்? பரிணாம வளர்ச்சி போதுமான விடையாகயிருக்க முடிந்ததா?"

எல்லா விஷயமும் விஷயமற்ற ஒன்றிலிருந்து வந்ததா? உயிருள்ள நிலை உயிரற்ற நிலையிலிருந்து வளர்ச்சியடைந்ததா? ஒவ்வொன்றும் நிரூபிக்கப்பட்டவகையில், கண்டறியப்பட்ட அறிவியலில் மேலும் நம்முடைய மனித அனுபவத்தில் அவைகள் நடைபெறக்கூடுமா என்ற நிராகரிப்புகளிலிருந்து வந்ததா? மனிதர்கள் தங்களுடைய சாதுரியத்தினால் திறமையினால், உழைப்பினால், பொறுமையினால் அதிசயமான பொருட்களை உருவாக்குகின்றனர் - ஆனால் அவைகளில் ஒன்றுகூட படைப்பவரில்லாமல் உயிரடைந்திருக்கவில்லை மேலும் ஒரு மனிதனும் தன்னால் உண்டாக்கப்பட்ட எந்த ஒரு பொருளுக்கும் வாழ்வளிக்க முடிகிறவனாய் இல்லை! ஆனால் மனிதனுடைய ஒரு மிகச் சாதாரணமான, உயிரற்ற படைப்புகூட ஒரு படைப்பாளியை கண்டிப்பாகக் கொண்டிருக்குமென நாம்

ஒத்துக்கொண்டால் பிறகு அடிப்படை தர்க்க சாஸ்திரம் மனித உடல் மிகவும் சிக்கலான மற்றும் அதிசயமான உயிருடனிருக்கும் இயந்திரம், அது ஒரு **சிருஷ்டிகரை** கொண்டிருக்குமென வற்புறுத்துகிறது நியாயம் அல்லவா. உண்மைக்குப் புறம்பான ஒரு வழியும் கிடையாது. என்னுடைய வாழ்க்கை ஒரு **சிருஷ்டிகரை** சார்ந்திருக்கிறது - அவர் யாராகயிருந்தாலும் அவர் எந்த நாமம் தரித்தவராயிருந்தாலும்.

### முடிவுரை எண் இரண்டு: சிலவெளிப்புற தாக்குதலுக்கு என் வாழ்விற்காக நான் நன்றியோடிருக்கிறேன்

## Conclusion Number Two: I own my existence to some outside force

"எனவே, நான் இங்கிருக்கிறேன். நான் யாரோ ஒருவரால் உருவாக்கப்பட்டேன்". இந்த உண்மைகள் பரிணாம வளர்ச்சிக் கொள்கையாளர்களின் ஆடம்பரமான பிரசங்கத்திற்கு வாய்ப்பூட்டு போடும். நான் இவர்களுடைய "கோட்பாடு பற்றிய ஒவ்வொன்றையும் அறிந்துகொள்ள அவசியமில்லை (மற்றும் இது ஒரு கோட்பாடாயிருக்கிறது, இது ஒரு நாஸ்தீக மதமாயிருக்கிறது) மேலும் அவர்களுடைய எல்லா ஆதாரமற்ற எண்ணங்களுக்கும் நான் பதிலளிக்கக் கூடியவளாயிருக்க விரும்பவில்லை, ஏனென்றால் அடிப்படை கொள்கை தானே நிலைக்காது. என்னுடைய வாழ்க்கை தனித்தே எனது சிருஷ்டிகரின் உண்மைத்தன்மையை நிரூபிக்கிறது.

இப்போது நான் இங்கேயிருக்கின்றபடியினால் யாரோ ஒருவர் என்னை உருவாக்கியிருக்கிறார்; **"யார் அந்த யாரோ ஒருவர்?"** மனிதர்கள் - பூமியில் மிகவும் அறிவுமிக்க உயிரினங்கள் - இன்னொரு மனிதனை சிருஷ்டிக்க முடியாதவன் என அறியப்பட்டுள்ளது இது. எனவே நம்மை உண்டாக்கின யாரோ ஒருவர் நம்மைக் காட்டிலும் பெரியவர், ஆனபடியினால் அவர் இவ்வுலகத்திற்குரியவராயிருக்க முடியாது. இந்த உயிரோடிருக்கிறவர் நாம் புரிந்து கொள்ள அப்பார்ப்பட்டவராயும், நாம் பெற்றுள்ள எந்த ஞானமும் அவருடையதும், அவருடைய மனதிலிருந்து நம்மிடம் வருகிறதுமானது - ஆனபடியினால், நாம் உகந்த பதிலைக் கொண்டிருக்கவில்லை ஆனால் நம்முடைய பதிலுக்காக ஆவிக்குரிய வெளிப்படுத்தலை ஆராய்ந்து பார்க்கவேண்டியர்களாயிருக்கிறோம்.

- பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்காக...
- பாலியல் வன்கொடுமை, நம் தேசத்திலிருந்து அகற்றப்பட...
- மாணவர்கள் சிற்றின்பங்களுக்கு இடம்கொடாதிருக்க...
- மாணவர்கள் கண்டுபிடிப்புகளில் கவனம்செலுத்த...
- சபைகள் ஆவிக்குரிய எழுப்புதல் அடைய...
- போதகர்கள் கடமை உணர்வோடு சுவிசேபணிசெய்ய...
- விசுவாச குடும்பங்கள் தொடர்ந்து ஊழியத்தை தாங்க...



பெண்கள் பகுதி

# பயப்படாதே – Fear Not

*-Glory Arjunan*



கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கும் சகோதரிகள் பயப்படத் தேவையில்லை. அண்டசராசரங்களை உண்டாக்கி அனைத்தும் தன் தன் வேலைகளை தேவசித்தத்தின்படி தவறாமல் செய்து கொண்டிருக்கப்பண்ணுகின்ற தேவன் உங்களையும், என்னையும் வழிநடத்துவது அதிகநிச்சயமல்லவா? ஆபிரகாம், கர்த்தரை விசுவாசிக்கிற அனைவருக்கும் தகப்பன். அவனை அருமையாக நடத்தினதேவன் அவன் விசுவாசித்த வண்ணமாய், விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் அவ்விதமே நடத்தவல்லவர். நாம் நம்மை சீர்தூக்கிப்பார்த்து ஆசீர்வாதங்களை இழந்து போகாதிருப்போமாக!

ஆபிரகாமை நோக்கி,....நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாபெரியபலனுமாயிருக்கிறேன் என்றார் (ஆதி.15:1). இவ்விதமான வாக்குத்தத்தினை பெற அவனிடம் இருந்தது விசுவாசமட்டுமல்ல, நற்கிரியையும்கூட. ஆம் ,ஆதி.14:22ல் சோதோம் ராஜாவை பார்த்து அவன் கூறியதை கவனியுங்கள். “ ....நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன்” என்றான். அப்படியென்றால், இவன் பிறனுக்குள்ள எதையும் இச்சிக்கவில்லை என்றுதானே பொருள். அன்பு சகோதரிகளே,ஸ்திரீகளாகிய நாம் இவ்விஷயத்தில் பெலவீனர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் நமது ஆதித்தாய் ஏவாளிடம் இச்சிக்கிற குணமிருந்ததே. நாமும்கூட அநேக நேரங்களில் நவநாகரிக உலகின் பொருட்களையோ, அல்லது பிறருக்குள்ள ஏதோ சிலவற்றை இச்சித்து இப்பொருள் நமக்கிருந்தால் நன்றாக இருக்கும் எனயோசிக்க ஆரம்பித்துவிடுகிறோம். பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருங்கள் என்ற கட்டளையை மறக்கக் கூடாது. அது பொருட்களாயிருந்தாலும் சரி,வேறுஎதுவாயிருந்தாலும் சரி .இச்சையை தவிர்க்கும் போது நம் தேவன் நமக்கு கேடகமும், மகாபெரியபெலனுமாயிருப்பார் என்பது அதிக நிச்சயம்.

ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவனுமல்லவா! ஈசாக்குக்கு கர்த்தர் தரிசனமாகி “...பயப்படாதே, நான் உன்னோடேகூடஇருந்து என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசிர்வதித்து, உன் சந்ததியைப் பெருகபண்ணுவேன் என்றார் ”(ஆதி.26:24) . ஈசாக்கு இவ்வாசீர்வாத வாக்குத்தத்தை எச்சூழலில் பெற்றான்? இவனுடைய வேலைக்காரருக்கும் கேராரூர் மேய்ப்பருக்கும் இடையே துரவு வெட்டின விஷயத்தில் பலமுறை வாக்குவாதம் ஏற்பட்டது. ஈசாக்கோ வாக்குவாதம் பண்ணாதபடி அவ்விடத்தைவிட்டு பெயர்ந்து வேறொரு இடத்திற்கு சென்ற போது கர்த்தர் அவனுக்கு தரிசனத்தில் இந்த ஆசீர்வாதத்தை வாக்குப் பண்ணினார். அநேக சமயங்களில் தேவனை அறியாத சிலரோடு நாமும் வாக்குவாதம் பண்ணவேண்டியசூழ்நிலை உருவாகிவிடுகின்றது .வேதம் ‘வாக்குவாதம் எழும்பும் முன் அதை விட்டு விடு ’ என்று கூறுகிறது . ஆம், நாமும் இவ்விதமாக அதை விட்டு விலகும்போது நம்மைஆசீர்வதித்து நம் சந்ததியைப் பெருகப்பண்ணுவார். எனவே அன்பு சகோதரிகளே, கர்த்தரை அறிந்துள்ள நாம் மற்றவர்களோடு வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்போமாக!

யோசுவாவை பார்த்து மோசே, கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார், அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாமென கர்த்தருக்குள் திடப்படுத்தினான். சகோதரிகளே, நம்மை எப்போதும் கலங்கப் பண்ணுகிறவன் பிசாசு தான். நம்முடைய வாழ்வில் எத்தனையோ கோணங்களில் பிசாசு நம்மைக் கலங்கப்பண்ணுகிறவனாய் இருக்கிறான் என அங்கலாயிக்கிறீர்களா?, வேதம், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் எனக் கூறுகிறது. ஆம், நாம் தைரியமாய் நின்று பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். உலகின் எக்காரியமும் நம்மை மேற்கொள்ளவிடாது எதிர்த்து நிற்போமானால் நிச்சயமாய் பிசாசு நம்மை விட்டு ஓடிப்போவான். பிசாசு கொண்டுவருகிறதான சோதனைகளைக் கண்டு நாம் பயப்படவேண்டாம், யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததுபோல் நமக்குள்ளும் புகுந்துவிட இடமளிக்காமல் கர்த்தருடைய ஆவியானவருக்கு இடமளிக்கும் போது நிச்சயமாய் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. சத்துருவாகிய பிசாசை ஜெயித்து பரம காணானுக்குள் பிரவேசிப்போம்.

இயேசுவின் கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரீகள், இயேசுவின் சரீரத்தைக் காணாமல் கலக்கமடைந்து பயத்துடன் காணப்பட்டனர் ( லூக் 24 : 15). ஏன் தெரியுமா? மாம்சசிந்தையினால் இயேசுவை மரித்தோரிடத்தில் தேடினதால் பயப்பட்டார்கள் அன்பான சகோதரிகளே, இன்று நீங்கள் இயேசுவை மாம்சபிரகாரமாகவே எண்ணிக் கொண்டு இருக்கிறீர்களா? இயேசுவை மரித்தோரிடத்தில் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? அவர் அப்போஸ்தலர்களைப் பார்த்து உங்களை திக்கற்றவர்களாய் விடேன் உங்களிடத்தில் வருவேன் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை உங்களுக்கு தருவேன் என்று கூறினாரே. அவ்வாறு இருக்க, நம்மை தேற்றி ஆற்றி இம்மானுவேலனாக நம்மோடு கர்த்தர் இருக்கும்போது நாம் உலக காரியங்களை கண்டு பயப்பட வேண்டாம்.

கர்த்தராகிய இயேசுவின் பிறப்பின் போது, தேவதூதன் பயப்படாதிருங்கள் -- எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். (லூக் 2:10) என்றான். ஆம் இயேசுவின் பிறப்பு நமக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும் நற்செய்தி , இயேசுவின் மரணம் நமக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தை உண்டாக்கும் மீட்பின் செய்தி , இயேசுவின் பரமேறிய சம்பவம் நம்மை தேற்றும்படிக்கு தேற்றரவாளனை அனுப்பிய ஆறுதலின் செய்தி, இயேசுவின் இரண்டாம் வருகை நம்மை நித்திய மகிழ்ச்சிக்குள்ளாக்கும் நித்திய செய்தி. பாருங்கள் ,இயேசுவினிடத்தில் எத்தனை இன்பமுண்டு! அவரிடம் நாம் அன்பு கொண்டிருப் போமானால் வரும் நாட்களைக் குறித்த பயம் நம்மை வாட்டாது."அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" என யோவான் 4:18 -ல் மிக அழகாய் கூறுகின்றார்.

அன்பான சகோதரிகளே; பயப்படாதேயுங்கள் நம்முடைய உள்ளத்தில் பயமிருக்குமானால் நிச்சியமாவே நாம் இயேசுவினிடத்தில் பூரண அன்பு கொண்டிருக்கவில்லை என்று தான் பொருள். நம்மை சீர்தூக்கிப்பார்த்து கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று வேதாகமத்தின் உதவியுடன் அறிந்து பயத்தை புறம்பே தள்ளி,ஜீவசனத்தைப் பிடித்துக் கொண்டு சுடர்களைப் போல் பிரகாசிப்போம் " நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன் என்று ஏசா 41:10-ல் கர்த்தர் சொல்லுகிறார். நாம் கர்த்தருடையவர்களாயிருந்து அவரால் வரும் அசீர்வாதத்தை பெறுவோமாக!



## பெர்கமு சபை - The Church in Pergamos

பெர்கமம், நகரத்தின்தலைமையகத்தில் உள்ள நகரம். KJV மொழிபெயர்ப்பிலிருந்து பெர்கமோஸ் என்றும் அழைக்கப்படும் பெர்கமம், ஆசியா மைனரின் ரோமானிய மாகாணத்தின் மற்றொரு நகரமாகும், இது இன்றும் உள்ளது. இது 'பெர்கமா' என்று அழைக்கப்படுகிறது. இது நவீன துருக்கியில் அமைந்துள்ளது. இப்போது இது முதன்மையான ஒரு முஸ்லீம் நகரமாகும். மேலும் இது 1996ல் 15 இஸ்லாமிய மசூதிகளைக் கொண்டுள்ளது. அதன் மசூதிகளில் ஒன்று பண்டைய காலங்களிலிருந்த ஒரு தேவாலய கட்டிடம் ஆகும். பெர்கமா பண்டைய நகரத்தின் இடிபாடுகளுக்கு இடையே கட்டப்பட்டுள்ளது. ஆனால் இது முதல் நூற்றாண்டில் இருந்த அளவுக்குப் பெரிதாக இல்லை.

பண்டைய பெர்கமோஸ் கைகஸ் ஆற்றில் இருந்து 3 மைல் தொலைவிலும் கடலில் இருந்து 15 மைல் தொலைவிலும் அமைந்திருந்தது. இந்த நகரத்தின் ஆரம்ப கால மக்கள் கி.மு 420 க்கு பின்னிருந்த கிரேக்க குடியேற்றவாசிகளின் வழித்தோன்றல்களாக இருந்தனர். பண்டைய உலகின் அதிசயங்களில் ஒன்றாக 40 அடி உயரம் கொண்ட ஜீயஸின் பலிபீடம் மிகவும் புகழ்பெற்றதாயிருந்தது. கி.மு 133க்குப் பிறகு இவர்களது ராஜ்யம் ரோமானிய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டு ஆசியாவின் அசல் ரோமானிய மாகாணம் உருவாக்கப்பட்டது. பெர்கமோஸ் அதன் தலைநகராக மாற்றப்பட்டு கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை தொர்ந்தது.

கிறிஸ்தவம் முதல் நூற்றாண்டில் பெர்கமோஸ் அல்லது பெர்கமுவில் இருந்தது. மேலும் அங்கே அமைந்துள்ள கிறிஸ்துவின் சபைக்கு எழுதி அனுப்பும்படி பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்ட யோவானுக்கு உரைக்கப்பட்டது வெளிப்படுத்தின விசேஷம் 2ம் அதிகாரம் 12 முதல் 17 வரையிலுள்ள வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்; இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது;..." எனத் தொடங்குகிறது. இங்கே இயேசு மீண்டும் இருமுனைகள் கொண்டவாளுடன் சித்தரிக்கப்படுகிறார். இது எபிரெயர் 4:12ல் சொல்லப்பட்டுள்ள "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" என்ற வசனமும் மற்றும் வெளிப்படுத்தல் 1:16 மற்றும் 2:16 ஐப் பற்றி நம்முடைய ஆய்விலிருந்து இந்த வாள் இயேசுவின் வாயிலிருந்து வந்தது என்பதைத் தெரியப்படுத்துகிறது. அதாவது இருபுறமும் கருக்குள்ள இயேசுவின் வாள் அல்லது பட்டயம் என்பது இயேசுவின் வார்த்தைகளைக் குறிக்கிறது. இதையே பவுல் எபேசியர் 6:17ல் தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் என்று அழைக்கிறார்.

"உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருகிக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்" (வச.13) என்றார். ஆம், அவருடைய

பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும் வெளியரங்கமாயிருக்கிறது..." (எபி.4:13). பெர்கமு சிமிர்னாவிற்கு முன் ஆசியாவின் தலைநகரமாக இருந்தது. ரோமானிய பேரரசர்களின் வழிபாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட மூன்று கோவில்கள் மற்றும் கான்செலியா எனப்படும் ஏகாதிபத்திய வழிபாட்டின் தலைமையகம் 'சாத்தானின் சிம்மாசனம் இருக்கும் இடமாக விளங்கியது.

இப்படியாக சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்தில் இருந்த போதிலும், கர்த்தருக்கு உண்மையான சாட்சியான அந்திப்பா கொல்லப்பட்ட போதிலும் பெர்கமு சபையார் கர்த்தரைப் பற்றும் விசுவாசத்தை மறுதலியாமலிருந்து வைராக்கியமுள்ளவர் களாக இருந்திருக்கின்றனர். பெர்கமு சபையாரின் இப்பேர்பட்ட நற்கிரியைகளை அறிந்தவராக அவர்களை உற்சாகப்படுத்துகிறதைக் காணமுடிகிறது. இன்றும் கிறிஸ்தவர் களாகிய நாம் சாத்தானின் சிம்மாசனம் இருக்கும் இடத்தில் தான் வாழ்ந்துவருகின்றோம். பெர்கமு சபையாரின் விசுவாசம் நமக்குள்ளும் இருக்கட்டும். பெர்கமத்தில் கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக்கொண்டிருந்தபடியால் பாராட்டப்படுகின்றனர். இயேசு கூறும் நேர்மறையான மற்றும் எதிர் மறையான விஷயங்களை கவனிப்பது மிகவும் முக்கியம். இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் வார்த்தையாக இருக்கிறார். "ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வர்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவா.1:1) என்று வாசிக்கிறோம். இங்கே இயேசுவே தேவனாகக் குறிப்பிடப்படுகிறார். மேலும் எபிரெயர் 13:8ன்படி "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" எனவே இயேசு கூறின நேர்மறையான காரியங்களை குறித்து உற்சாகமடைவோம்."ஆகிலும் சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; என்கிறார். அது என்ன குறை? பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் பெர்கமு சபையில் உண்டு என்கிறார். பிலேயாமுடைய போதகம் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக இடறலாக இருந்தது. விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான போதகமாயிருந்தது. இன்றும் கூட இப்பேர்ப்பட்ட போதகங்கள் சபைகளில் ஏராளம் உண்டு. கிறிஸ்துவைத் தரித்துக்கொண்ட நாமோ ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

கடைசியாக "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது" (வச.17) என்கிறார். இங்கே மறைவான மன்னா என்பது ஜெயங்கொள்ளுகிற ஒவ்வொருவருடைய ஆத்துமாவுக்கும் கொடுக்கப்படும் ஆவிக்குரிய ஆகாரமாகும். ஒருவன் ஆவியில் பிழைத்திருக்க வேண்டுமென்றால் அவனுக்கு ஆவிக்குரிய மன்னா வேண்டும். அப்படியாக ஜெயங்கொள்ளுகிற ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இந்த மன்னா கொடுக்கப்படும்.

மேலும் ஒவ்வொரு உண்மையுள்ள கிறிஸ்தவனுக்கும் பரலோகத்தில் ஒரு புதிய நாமத்தை கொடுப்பதாக இயேசு வாக்களிக்கிறார். இந்த வாக்குத்தத்தங்களைப் பெறும்படி நாமும் கர்த்தருக்குப்பிரியமானதை நடப்பித்து, அவர் அருவருக்கிற காரியங்களை நம்மை விட்டு விலக்கிக் காத்துக்கொள்ளுவோம். பெர்கமு சபைக்குச் சொல்லப்பட்ட மேற்கூறிய ஆசீர்வாதங்களை நாமும் பெறும்படி கிரியை நடப்பிப்போம் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக்கொள்வோம்.

**இவ்விதழில் வெளிவந்துள்ள ஒவ்வொரு செய்தியிலிருந்தும் ஒவ்வொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளன. சரியான விடை எழுதி அனுப்பும் ஒவ்வொரு வாசகருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.**

**வாசகருக்கான நற்செய்தி**

**இம்மாத இதழ் வேத அறிவுப்போட்டி**

***TWOC NO.8 ஜனவரி 2025***

1. எவர்கள் நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்கள் தான் என்று அறிக்கையிட்டார்கள்?
2. சபையானது பூமிக்குரிய தலைமை ஸ்தாபனங்களைப் பெற்றிருக்கிறதா?
3. நுண்ணிய உயிரினங்களை, கொஞ்சங்குறைய நிஜத்தை உருவாக்கும் இந்த கண்களால் பார்க்கமுடியுமா?
4. நம்மை எப்போதும் கலங்கப்பண்ணுகிறவன் யார்?
5. நாம் தொழுகையில் இயேசுவின் நாமத்தில் பாடலாம், ஆனால் இயேசுவின் நாமத்தில் இசைக்கருவிகளை இசைக்க முடியுமா?
6. எந்த சபையிலே சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்தில் அந்திப்பா என்ற உண்மையுள்ள சாட்சி கொல்லப்பட்டான்?
7. பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என்று எதைப்போல காத்திருக்கிறான்?

இப்போட்டியில் கலந்து கொள்ளுகிறவர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள **TWOC No,**உங்களுடைய **Ref.No,** உங்களுடைய முழு முகவரி மற்றும் உங்கள் மொபைல் எண்ணுடன் எழுதி இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும். உங்களுக்கான பரிசுகளை பதிவு தபால் மூலம் அடுத்த மாதம் 10ம் தேதிக்குள் அனுப்பிவைப்போம். நீங்கள் போஸ்ட் மேனிடம் நேரடியாக கையொப்பம் இட்டு பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

**குறிப்பு:** முன்னமே தொடர்ந்து வேத அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் இதிலும் கலந்து கொள்ளலாம் ஆனால் தனித் தனியே தபால் மூலம் பதில் எழுதி அனுப்பவேண்டும். நன்றி. ஆசிரியர்.

# வேதாகமம் உறுதிப்படுத்தப்படுதல்

**புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் மண்வெட்டியானது சத்தியத்திற்கும் வேதாகமத்திற்கும் ஒரு நண்பனாகவே இருக்கிறது. பாலஸ்தீனத்தில் பல ஆண்டுகளாக புதை பொருள்களைத்தோண்டும் பணியில் ஈடுபட்ட பிறகு, சின் சினாட்டியில் உள்ள எபிரெய யூனியன் செமினரியில் உள்ள பேராசிரியர் நெல்சன் குளுக் அவர்கள், தம்முடைய மற்றும் தம் சக பணியாளர்களுடைய கண்டுபிடிப்புகள் யாவும் வேதாகமத்தின் உண்மைகள் மற்றும் சத்தியங்களை உறுதிப்படுத்துகின்றன என்று எழுதினார்.**

**அவர் "வேதாகமத்தின் வரலாற்றுக்கூற்று எதற்கும் முரண்பட்ட அல்லது மறுக்கின்ற புதை பொருள் கண்டுபிடிப்பு என்பது ஒரு காலத்திலும் ஒன்று கூடக் கண்டறியப்பட்டதில்லை" என்று கூறினார்.**

**(Nelson Glneck, "New York Times Book Review")**

Simple Sermons That Teach **பாடம் 2**

**தொழுகையில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவது கொலோசெயர் 3:16-17** *- Jerry Bates*



## தொழுகையில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவது கொலோசெயர் 3:16-17

1. கிறிஸ்துவமார்க்கத்தின் வரலாற்றில் உபதேசங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் இருந்ததுண்டு.

2. அப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகளுள் இசைக் கருவிகளைப் பற்றியதும் ஒன்று சபைகள் இந்த விஷயத்தில் மாறுபட்டு பிரிந்திருக்கின்றன.

3. இன்று சிலரே இதைக் குறித்து உண்மையான கரிசனையுடையவர்களாயிருக்கின்றனர்.

4. இன்று சபையில் அநேகர் இதை எதிர்ப்பதில்லை சில பிரசங்கியார்கள் சபை தன்னை மாற்றிக் கொள்ளவேண்டும் காலம் மிகவும் இருண்டதாயிருக்கும் என்கின்றனர். அதாவது இவைகளை எதிர்த்து இயங்கக்கூடிய சிறு சிறு சபைகளைத்தவிர வேறு சபைகள் இருக்காது என்கின்றனர்.

5. வேதம் பல விதமான தொழுகைகளைப் பற்றி விளக்கிச் சொல்கிறது. சுய விருப்பத்தின்படி தொழுது கொள்வது, வீணான தொழுகை அறியாமையில் தொழுது கொள்வது மற்றும் உண்மையாய்த் தொழுது கொள்வது. ஆனால் ஒரே விதமான தொழுகை மட்டுமே தேவனுக்கு ஏற்புடையது.

**I. நாம் அதை பயன்படுத்துவதில்லை என்று சிலர் சொல்கிறார்கள்.**

**அ.** நாம் மாறுபட்டவர்களாயிருக்க விரும்புகிறோம்.

1. பிடிவாதமாக இருப்பது
2. வித்தியாசமாக காணப்பட விரும்புவது
3. தொல்லை கொடுப்பவர்களாக இருப்பது ஆகாப் எலியாகூட தொல்லை கொடுப்பவர் என்று கூறப்பட்டார். இஸ்ரவேலை கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா? (1இரா.18:17).

**ஆ.** நல்ல இசை தெரியாது அல்லது இசையில் விருப்பமில்லை.

1. நான் ஒரு இசைகலைஞனல்ல அல்லது நல்ல இசையை கற்றுக் கொடுக்கவில்லை.
2. மற்ற அநேகர் இசையை நன்கு கற்றுக் கொடுக்கும் பள்ளிகளை விரும்புகிறார்கள். புத்தகங்கள் வாயிலாக இசையை அறிந்திருக்கிறார்கள். அநேக இசைக் கருவிகளை இசைக்கிறார்கள் மற்றும் பல வழிகளில்..
3. அநேகமாக எல்லா சபைகளிலும் ராகத்தோடு பாடுவதற்கேற்ப இசைக்கக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்கள்.

**இ.** பாரம்பரியத்தில் கட்டுண்டவர்கள்

1. எது புதிதாயிருந்தாலும் அதற்கு நாம் எதிரிகள்.
2. நான் கைக்கொள்ளுகிற எல்லாமே பாரம்பரியம் தான் என்று சில பிரசங்கியார்கள், சொல்லுகிறார்கள்.

**II. இதைக் குறித்த மூல வாக்கியம்.**

**அ.** கொலோசெயர் 3:17

1. இதன் அர்த்தம் கிறிஸ்துவின் அதிகாரத்தை எல்லாவற்றிலும் மதித்து நடப்பதாகும்.
2. தனிப்பட்ட ஒழுக்க நெறி மற்றும் நன்னடத்தை தொடர்பானவற்றில் இது உண்மையாகும்.

3. இது நம்முடைய எண்ணங்கள், செயல்கள், இரகசியமானவற்றில் கூட உண்மையாகும்.

4. இது கிறிஸ்தவர்களின் பொது கூடுகைகளில் செயல்பாட்டுக்கு பொருந்துவதாகும். தத்துவம் (அல்லது விதி). தேவன் நம்மிடம் ஒன்றைச் செய்யவேண்டுமென்றும் அதை எப்படிச் செய்யவேண்டுமென்றும் சொல்லியிருக்கும்போது அதை நாம் அவர் சொல்லியது என்னவோ அதை சொல்லியபடியே செய்யவேண்டும்.

**ஆ.** பக்தி மார்க்கத்தில் சொல்லப்பட்டபடி செய்வது நமக்கு பிரச்சனையாயிருக்கிறது. ஆனால் அதனுடைய முக்கியத்துவத்தை நாம் மற்ற செயல்பாடுகளில் புரிந்து கொள்ளுகிறோம்.

1. சமையல் சமையற் குறிப்பில் 4 முட்டைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.வேறு எண்ணிக்கையில் பயன்படுத்தினால் அது சமையற் குறிப்பை மாற்றுவது மட்டுமல்ல அதன் ருசியும் மாறுபடும்.

2. திருமண வரவேற்பில் தேதியும் நேரமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேறு எந்த நாளையும் நேரத்தையும் இது தவிர்க்கின்றது.

**இ.** நோவா: "நோவா அப்படியே செய்தான் தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்" (ஆதி.6:22).

1. கொப்பேர் மரத்தினால் ஒரு பேழையை செய்யச் சொல்லி உள்ளும் புறமும் அப்படியே ஓரிடத்தில் நிறுத்தச் சொன்னார்.

2. அவருக்கு பேழையினுடைய சரியான அளவைக் கொடுத்தார், எத்தனை அடுக்குகள், சன்னல்கள். கதவுகள் மற்றும் அதன் அளவுகளைக் கொடுத்தார்.

3. எத்தனை மிருகங்களை பேழைக்குள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்.

4. தேவன் சொல்லியபடியே நோவா செய்தார். எந்த மாற்றமும் கீழ்ப்படியாமையாகும். நோவா அதற்குரிய விலையைக் கொடுத்திருப்பார்.

**ஈ.** மத்தேயு 26

1. இயேசு திருவிருந்தை ஏற்படுத்தினார். அதில் அப்பமும் திராட்சரசமும் பயன்படுத்தும் படி சொன்னார்.

2. சிலர் தேனும் கொக்கோ கோலாவும் கூட சரியானதுதான் என்று வாதிடுகின்றனர்.

3. நாம் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் பயன்படுத்துகிறோம். ஏனென்றால் இயேசு அப்படி செய்யும்படி சொன்னதால்

## III. புதிய ஏற்பாடு பாட மட்டுமே அதிகாரமளிக்கிறது.

**அ.** சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி (எபேசியர் 5:19).

1. "பாடிக் கீர்த்தனம் பண்ணி என்ற வார்த்தைகளில் இசைக்கருவியும் உள்ளடக்கப்பட்டதே என்று அநேகர் சொல்கிறார்கள் பாட்டிற்கு சபையின் பிரசங்கியார் ஒருவர் இசைக் கருவி இல்லாமல் பாடமுடியாது என்கிறார். அவர் சார்ந்திருந்த பிரிவினை சபையாரோ அநேக வருடங்கள் இசைக் கருவிகளின் உபயோகத்தை எதிர்த்தனர். அனைத்து பேரறிவாளிகளும் ஆதித்திருச்சபையில் வாய்ப்பாடல் மட்டுமே இருந்தது என்பதை யுதர்களின் 22 சங்கங்களிலும் ஜெப ஆலயங்களிலும் மேலும் கிரேக்கர்கள் தங்கள் விக்கிரக வழிபாட்டின் போதும் இசைக் கருவிகளை பயன்படுத்தியிருந்தாலும் ஆதித்திருச்சபையில் வாய்ப் பாட்டு மட்டுமே இருந்தது என்பதை பேரறிவாளர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அது உண்மையாய் இருக்குமானால் ஏன் பவுலும் ஆதித்திருச்சபையினரும் (இசைக் கருவியை) பயன்படுத்தவில்லை?

2. குறிப்பிடப்பட்டுள்ள கருவி இதயம். இது புதிய ஏற்பாட்டின்படியான ஆவிக்குரிய தொழுகையானது பழைய ஏற்பாட்டின் படியான சரீரப் பிரகாரமான தொழுகைக்கு வேறு பட்டதாயிருக்கிறது.

3. கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும்,

ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி" (கொலோசெயர் 3;16). ஆவிக்குரியதைத்தான் இங்கே மறுபடியும் வலியுறுத்துகின்றார்.

**ஆ.** 13 வசனங்கள் தொழுகையில் பாடுவது தொடர்பாக விவரித்து சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பிடப்பட்டுள்ள ஒரே இசை வாய்ப்பாட்டு.

1. துக்கமான அல்லது சந்தோஷமான சூழ்நிலையில் இசைக்கப்படுவதைப் பற்றி 44 முறை புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில் தவிர தொழுகையோடு தொடர்பாக ஒரு இடத்திலும் இல்லை.

2. அப்படியாக நாம் தொழுகையில் இயேசுவின் நாமத்தில் பாடலாம் ஆனால் இயேசுவின் நாமத்தில் கருவிகளை இசைக்க முடியாது.

3. ஏனென்றால் இயேசு அதற்கு அதிகாரங் கொடுக்கவில்லை.

4. பிளாயிட் டெக்கர் அவர்களுக்கும் சகோதரர் வில்காக்ஸ் அவர்களுக்கும் இடையே நடந்த 5 நாள் விவாதத்தைப் பற்றி சொல்லுங்கள். டெக்கர் அவர்கள் தல சபையின் பேச்சாளராக 30 நிமிடங்கள் தன் சொல்லாற்றலால் முதலாவது இசைக் கருவிகளை பயன்படுத்துவதற்கு ஆதரவாக பேசினார். அடுத்து வில்காக்ஸ் அவர்கள் எழுந்து கரும்பலகையில் ஒரு பக்கம் பாடும்படி புதிய ஏற்பாட்டில் அதிகாரங் கொடுத்துள்ள வசனங்களையும், அடுத்த பக்கத்தில் ஒரு வட்டம் வரைந்து அதில் டெக்கர் அவர்கள் புதிய ஏற்பாட்டில் எந்த இடத்தில் இசைக்கருவிகளை பயன்படுத்த அதிகாரங் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை எழுதினால் விவாதம் முடிந்துவிடும் என்று எழுதினார். இரண்டே நிமிடங்கள் பேசிவிட்டு அமர்ந்தார். டெக்கர் எழுந்து வில்காக்ஸ் அவர்களை கேலி பேசிவிட்டு இசைக் கருவிகளுக்கு ஆதரவாக தனது வழக்கமான ஆதரவை அறிவித்தார். வில்காக்ஸ் மறுபடியும் 2 நிமிடங்கள் பேசிவிட்டு அமர்ந்தார். அடுத்த நாள் ஒரு மூப்பர் வந்து டெக்கரின் அலுவலகத்துக்கு வந்து ஏன் அவர் கரும்பலகையில் ஒரு வசனத்தை எழுதவில்லை என்று கேட்டார். அதற்கு டெக்கர் அந்த வசனம் எங்கிருக்கிறது என்று வந்த மூப்பர் சொல்லால் எழுதிவிடுவேன் என்றார். "நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?" டெக்கர் சொன்னார்: எனக்குத் தெரியாது ஆனால் இது போல் இன்னும் நான்கு இரவுகள் இருக்கின்றன.

5. நேரத்திற்கு பின்பு டெக்கர் வில்காக்ஸ் அவர்களிடம் சென்று தான் தப்பு செய்து விட்டேன் என்று மன்னிப்பு கேட்டார். இன்றைக்கு இதுபோன்ற அறிக்கையை செய்வதற்கு வெகு சிலரே இருப்பர் மற்றவர்கள் இது போன்ற கருத்துக்கள் கலந்து பேச தகுதியுள்ளவைகள் என்று கூட நினைப்பதில்லை.

**இ.** சிலர் நமக்கு சபை கூடும் கட்டிடம் அல்லது பாட்டு புத்தகம் ஆகியவற்றை வைத்துக் கொள்ள எவ்வளவு அதிகாரமுள்ளதோ அவ்வளவு அதிகாரம் பியானோ வைத்துக் கொள்ளவும் இருக்கிறது என்கின்றனர். இவை இரண்டுமே வேதத்தில் குறிப்பிடப்படவில்லை.

1. தொழுகைக்காக நாம் கூடிவரவேண்டுமென்று கட்டளையிடப்பட்டுள்ளது. இதற்கு அவசியமாக ஒரு இடம் தேவைப்படுகிறது. (விலைக்கு வாங்கியோ அல்லது வாடகைக்கு எடுத்தோ) ஒரு மரத்தடியிலோ அல்லது ஒரு வீட்டிலோ.

2. பாடவேண்டுமென்று நாம் கட்டளையிடப்பட்டுள்ளோம் அப்படியென்றால அதில் பாட்டு புத்தகங்கள் அவசியமாயிருக்கிறது. இது நாம் பாட உதவுகிறது.

3. ஒரு கருவி என்பது பாட உதவும் ஒன்றல்ல மாறாக அது பாடலிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு இசையாகும்.

**முடிவுரை:** 1. யாரும் இசைக்கருவியை உபயோகிக்கலாம் என்று ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. ஏனென்றால் நீண்ட கால ஆய்வுக்குப் பிறகு அது தேவனுடைய திட்டத்தின் படியானது என்று அவர் தீர்மானித்தார். 2. அது அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது ஏனென்றால் மதரீதியாக நடைமுறையில் தேர்ந்தெடுப்பதற்கு அது சவுகரியமான ஒன்றாக இருக்கிறது. வேறு வார்த்தையில் சொல்வாரென்றால் நாம் அதை விரும்புகிறோம் அல்லது மற்ற எல்லோரையும் போல இருக்க விரும்புகிறோம். ஆனால் மறுபடியும் இது மனிதனுடைய மாம்ச வாழ்க்கைக்கு பிடித்ததாகவே இருக்கிறது. 3. தனிமனிதனாக ஒருவேளை நாம் ஆதரிக்காவிட்டாலும், இசைக்கருவிகள் வாசிப்பதையும் நாம் சார்ந்துள்ள சபையில் இதை வாசித்தால் அதன் பயன்பாட்டுக்கு நீங்கள் ஆதரவளிக்கிறீர்கள். 4. இதே கொள்கை வேறு அநேகவற்றிக்கும் பொருந்தும். நவீன கால மத நம்பிக்கை அதிகாரமளிக்கப்படாத அநேகத்தை சேர்த்துக்கொள்ளுகிறது. (தூபம் காட்டுவது) சாம்பிராணி புகைப்பது பக்தி நடனம், மெழுகு வர்த்தி ஏற்றுதல், இறுதிச் சடங்குகள் மற்றும் பல. 4. தேவன் சொன்னபடி அதிகாரமளித்தபடி செய்வதில் மட்டும் நீங்கள் திருப்தியடைகிறீர்களா?

சிறுவர் பகுதி

# கெர்ச்சிக்கிற சிங்கம்போல்...

## Like a roaring Lion



வேத பகுதி: 1பேதுரு 5:8

கிறிஸ்துவுக்குப் பிரியமான பிள்ளைகள் யாவருக்கும் மற்றும் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" வாசர்களுக்கும் வாழ்த்துக்கள்.

மேற்கண்ட தலைப்பில் பரிசுத்த ஆவியானவர் பேதுரு மூலமாக நமக்கு தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள் என்று எச்சரிக்கை செய்துவிட்டு, பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று காத்திருக்கிறான். ஆகையால் கவனமாய் இருக்கும்படி கூறுகிறார்.

எனவே நாம் மிகவும் கவனமாயிருந்து தேவனுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்து பிசாசின் தந்திரங்களுக்கு தப்பிக்கொள்ளும்படியாக கர்த்தருடைய வசனங்களை உற்றுநோக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. சிங்கங்கள் காட்டில் மற்ற விலங்குகளை வேட்டையாடுகிறது. அது எவ்விதமாக வேட்டையாடுகிறது என்பதை நீங்கள் டிவி சேனல் மூலமாக பார்க்கலாம். அந்த விதமாக நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் கர்த்தருடைய பிள்ளைகளில் எவனை விழுங்கலாம் என்று ஒவ்வொரு நாளும் சுற்றிச் சுற்றி வருகிறான். நம்மை வஞ்சிக்கும்படியாகவும், தந்திரமாகவும் வருவான். ஆகையால் ஒவ்வொருநாளும் நாம் தேவனுடைய ஆலோசனைகளின்படியும், கர்த்தருடைய ஊழியக்காரார்களுடைய வழிநடத்துதலின்படியும் நாம் வாழவேண்டியவர்களா யிருக்கிறோம். இவைகளை ஏற்றுக்கொள்ளாமல் மந்தையைவிட்டு வெளியே செல்லும் ஒரு ஆட்டைப்போல வெளியே போவோமானால் என்ன நேரிடும். சிங்கம் அந்த ஆட்டை அடித்து கொன்றுபோடும். அதைப்போல கர்த்தருடைய சபையை விட்டு வெளியே போகும்போதும், ஊழியர்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாதிருக்கும்போதும், வேதத்தை புறம்பாக்கிப்போட்டு, தன் இஷ்டப்படி நடக்கும்போது சிங்கம் வாயில் அகப்பட்ட ஆட்டைப்போல நாமும் பிசாசினால் விழுங்கப்படுவோம்.

கர்த்தர் தம்முடைய மந்தையாகிய சபையை அவர் நேசிக்கிறார். அதற்காக இரத்தம் சிந்தினார். அதை பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்வரை அதை பாதுகாத்து, பராமரித்து, போஷித்து காக்கிறார். இயேசு சொல்கிறார்: "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக்கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" என்றார் (யோவான் 10:11-15). இந்த நல்ல மேய்ப்பனாகிய ஆண்டவர் இயேசு உங்களுக்காக ஜீவனைக்கொடுத்தவர். அவர் உங்களை பிசாசின் கெர்ச்சிப்புக்கும், அவனுடைய பயமுறுத்தலுக்கும் விலக்கிக் காப்பாராக!

**மனப்பாட வசனம்**

"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது;
நான் அவைகளை அறிந்திருக்கிறேன்,
அவைகள் எனக்குப் பின்செல்கிறது" யோவான் 10:27



| | |
|---|---|
| 1. Place of Publication | - Batlagundu. |
| 2. Periodicity of its Publication | - Monthly. |
| 3. Printer`s Name | - R.Sathiyamoorthi |
| 4. Address | - 14/13/24 Melamanthai St<br>Batlagundu -624 202,<br>Dindigul Dt, Tamilnadu. |
| 5. Whether citizen of India | - Yes. |
| 6. Publisher`s Name | - B.Arjunan |
| 7. Address | - 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu - 624 202,<br>Dindigul Dt., Tamilnadu. |
| 8. Editor`s name | - B.Arjunan |
| 9. Address | - 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu - 624 202,<br>Dindigul Dt., Tamilnadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date::28.02.2025 Signature of Publisher.

- கரீபிய நாடான ஹைதியில் இதுவரை 10 லட்சம்பேர் வேறு இடங்களுக்கு நகர்ந்துள்ளனர்.
- ரேஷன் கார்டுடன் ஆதார் எண்ணை இணைப்பதை மத்திய அரசு கட்டாயமாக்கியுள்ளது. இணைக்காவிட்டால் ரேஷனில் பொருட்கள் வாங்கமுடியாது.
- மனித குலத்தின் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம் அமைதி – காந்தியடிகள்

**நடப்புச் செய்திகள்**

நன்றி - NewsPoint

# ஆன்மீக ஆலோசனை



ஆலோசனையில்லாத இடத்தில்
ஜனங்கள் விழுந்துபோவார்கள் (நீதி.11:14)

நீதியையும் தயையும் பின்பற்றுகிறவன்
ஜீவனையும் நீதியையும் மகிமையையும்
கண்டடைவான். நீதி.21:21



## வேத அறிவுப் போட்டி எண்: 295

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் வேத அறிவுப்போட்டி எண்ணையும் குறிப்பிட்டு எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதலாம் தேதியில் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணினவன் யார்?
2. இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் மீட்கிறவர் எங்கிருந்து வந்து அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார்?
3. உங்களில் பரதேசிக்கும் சுதேசிக்கும் எவ்வித நியாயம் இருக்கவேண்டும்?
4. இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம் அப்பொழுது எவ்விதமாய்ப் பார்ப்போம்?
5. கர்த்தர் மேகத்தில் இறங்கி மோசேயோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியை எத்தனை மூப்பர்கள்மேல் வைத்தார்?
6. எங்களுக்கு இடங்கொடுங்கள், நாங்கள் ஒருவனுக்கும் அநியாயஞ்செய்யவில்லை, ஒருவனையும் கெடுக்கவில்லை, ஒருவனையும் வஞ்சிக்கவுமில்லை என்றவன் யார்?
7. ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும்போனால் அது எவர் சொல்லாத வார்த்தை?
8. மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை அப்பொழுது துன்பப்படுத்தினதுபோல, இப்பொழுதும் நடந்துவருகிறது என்பது சரியா?
9. யோசுவா எவர்களை விறகு வெட்டுகிறவர்களாகவும் தண்ணீர் எடுக்கிறவர்களாகவுமாக்கினான்?
10. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்கு என்னவாயிருக்கிறான்?

## வேதாகம ஆய்வு... 79

## தேமேத்திரியு - Demetrius

1. எல்லாராலும் நற்சாட்சிபெற்றவன் – 3யோ.12
2. சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவன் – 3யோ.12
3. அப்போஸ்தலருடைய சாட்சி – 3யோ.12
4. அப்போஸ்தலருடைய சாட்சியே மெய்
5. தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் இருந்தான் – அப்.19:24



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

March 2025

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்




- Our TV Program: Six Days of the Week
- *Every Monday, Tuesday, Wednesday, Thursday, Friday & Saturday 6.00 P.M on Joy TV*



- ***24 Hours Worldwide Web Twoc TV Channel***

YouTube : the word of christ

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
**The Word of Christ,**
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**





Contact Us: 6379350509

To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan